ශ්‍රී ලංකා ජනාධිපති
இலங்கை சனாதிபதி
President of Sri Lanka

## வாழ்த்துச் செய்தி

சர்வதேச தொலைத்தொடர்பு ஒன்றியத்தின் 153வது ஆண்டு நிறைவு நிகழும் இவ்வேளையில் அனுஷ்டிக்கப்படும் 2018 ஆம் ஆண்டின் சர்வதேச தொலைத்தொடர்பு மற்றும் தகவல் சமூக தினத்தை (WTISD - 2018) முன்னிட்டு இந்த வாழ்த்துச் செய்தியை அனுப்பி வைப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

இவ்வருட சர்வதேச தொலைத்தொடர்பு, தகவல் சமூக தினத்தின் தொனிப்பொருளான "செயற்கை நுண்ணறிவின் சாதகமான பயனை அனைவருக்கும் சாத்தியமாக்குதல்" என்பது தற்காலத்திற்கு மிகவும் பொருத்தமானதாகும். இது பற்றிய சமூக விழிப்புணர்வை அதிகரிப்பதற்கு அங்கத்துவ நாடுகள் நடவடிக்கை எடுத்து வருகின்றன என்பதையும் இங்கு குறிப்பிட வேண்டும்.

செயற்கை நுண்ணறிவு இன்று சகல துறைகளுடனும் பின்னிப் பிணைந்திருப்பதுடன், இத் தொழில்நுட்பமானது சுகாதாரப் பராமரிப்பு, கல்வி, நிதி, விவசாயம், போக்குவரத்து உள்ளிட்ட பல்வேறு துறைசார் சேவைகளை மேம்படுத்தி மக்களுக்கு சிறந்த வாழ்க்கையை பெற்றுக்கொடுக்க பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

எமது அபிவிருத்தியை ஊக்குவிப்பதற்கு, அனைத்துத் துறைகளிலும் செயற்கை நுண்ணறிவை பயன்படுத்துவதற்கான வினைத்திறனான வழிவகைகளை நாம் கண்டறிய வேண்டும். அத்தோடு பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கான எமது அணுகுமுறை மக்கள் மயப்பட்டதாகவும் இருத்தல் வேண்டும். பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை நாட்டின் தேசிய கொள்கைகளுடன் ஒருங்கிணைத்து பேண்தகு அபிவிருத்திக்கான தனியான அமைச்சொன்றை இலங்கை அரசாங்கம் உருவாக்கியிருக்கின்றது. மேலும், இலங்கையின் கடல் வளங்களும் ஏனைய இயற்கை வளங்களும் சூழலை நேசிக்கும் வகையிலும் பேண்தகு அடிப்படையிலும் முழுமையாக பயன்படுத்தப்படுவதை உறுதிசெய்யும் நீலப் பசுமை பொருளாதாரத் திட்டமொன்றை நாம் ஆரம்பித்திருக்கின்றோம். இந்த பொருளாதார மூலோபாயத்தின் ஊடாக சிறந்த நடைமுறைகளுக்கான ஒரு முன்மாதிரியாக திகழ வேண்டும் என்பதே இலங்கையின் எதிர்பார்ப்பாகும்.

சர்வதேச தொலைத்தொடர்பு ஒன்றியத்திற்கு எனது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்ளும் அதேவேளை, அதன் எதிர்கால முயற்சிகள் வெற்றிபெற எனது நல்லாசிகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மைத்ரிபால சிறிசேன

2018 மே 17 ஆம் திகதி

ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு
Democratic Socialist Republic of Sri Lanka